செ.வெ. எண் - 87 நாள் : 27-07-17

**திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலெட்சுமி தலைமையில் சாரல் விழாவை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் இன்று திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள் தொடங்கி வைத்தார் மாண்புமிகு செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர்ராஜூ அவர்கள் 129 பயனாளிகளுக்கு 59.40 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்**

---

திருநெல்வேலி மாவட்டம் குற்றால கலைவாணர் அரங்கில் சாரல் திருவிழா துவக்கவிழா மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில் இன்று (27-07-17) நடைபெற்றது. இந்த விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள் கலந்துக்கொண்டு சாரல் விழாவை தொடங்கி வைத்தார். மாண்புமிகு செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர்ராஜூ அவர்கள் 129 பயனாளிகளுக்கு 59.40 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.அவர்கள் வரவேற்புரையாற்றினர்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடநலத்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது

பாரம்பரியமும் புகழும் கொண்ட குற்றால சாரல் விழாவில் கலந்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். உயர்ந்த சிந்தனையுடன் திட்டமிட்டு நாடே வியக்கும் வண்ணம் சுற்றுலாத்துறையை ஏற்றமும், மாற்றமும் செய்த பெருமை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவை அவர்களையே சாரும். நாளுக்குநாள் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருவது குற்றாலத்தின் தனிச்சிறப்பாகும். இந்திய மாநிலங்களில் சுற்றுலா செல்லுவதற்கு பாதுகாப்பும், மனநிறைவு தரக்கூடிய மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. சுற்றுலாதலங்களை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும். சுற்றுலாதான் நம்மை நாம் புரிந்துக்கொள்ளவும் ஒரு இடத்தின் சிறப்பை பண்பாட்டை அறியஉதவும் காலகண்ணாடியாகும். எனவே சுற்றுலாதலங்களை பாதுகாக்கவேண்டும் என பேசினார்.

இவ்விழாவில் மாண்புமிகு செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் பேசும் போது

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் நமது பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில் குற்றால சாரல் திருவிழா தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் பல்வேறு சுற்றுலாத்தலங்கள் இருந்த போதும் குற்றாலம் சிறப்புமிக்கதாகும். தமிழகத்தில் சுற்றுலாத்துறை மூலம் பொங்கல் விழா, மாம்மலப்புரத்தில் இந்திய நாட்டியவிழா, மதுரையில் சித்திரைதிருவிழா, மே மாதத்தில் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு பகுதிகளில் கோடைவிழா ஒக்கேனக்கல் ஆடிபெருக்கு விழா, கொல்லிமலையில் வல்வில்ஓரி திருவிழா உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் நமது பாரம்பரியத்தை காக்கும் வகையில் நடத்தப்படுகிறது. குற்றாலத்தில் குளிக்கும் ஆர்வத்தை போல வேறு எங்கும் பெறமுடியாது. ஆனந்தமும், உற்சாகமும், ஊக்கமும் உண்டாகும், மனஅழுத்தத்தை போக்கும் இடமாகவும் குற்றாலம் உள்ளது. குற்றால அருவியில் குளிக்கும் போது புத்துணர்வு பெருகும். மகிழ்ச்சியையும், மனநிறைவை பெரும் இவ்விழாவை பொதுமக்கள் அனைவரும் சிறப்பாக கொண்டாடிடவேண்டும் என பேசினார்.

இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் பேசும் போது

தமிழகத்தில் சுற்றுலாதலங்களாக 40 இடங்கள் உள்ளது. மலைவாசஸ்தலங்கள், கடற்கரை சுற்றுலா, புராதனசிற்பங்கள் சுற்றுலா, படகுகுழாம் சுற்றுலா, வனவிலங்கு சராணலய சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு சுற்றுலாக்கள் மேம்பாடுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் சுற்றுலா பயணிகளை அதிகமாக கவரும் மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. தமிழகத்திற்கு பல்வேறு நாடுகளில்

இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா வருகிறார்கள். தமிழகம் அனைத்து மதத்தினரையும் கவரும் அதிகமான வழிப்பாட்டு தலங்களை பெற்ற மாநிலமாக திகழ்கிறது. மருத்துவ சுற்றுலா வரும் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் போக்குவரத்து வசதிகளும் சிறப்பாக உள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அற்புத திட்டங்களால் மிகை மின்மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதுவும் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்க காரணமாக உள்ளது. மேலும் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சிறப்பாக உள்ளதால் சுற்றுலா பயணிகள் நிம்மதியாக வந்து செல்கின்றனர். குற்றாலம் பகுதியில் கடந்த மாதம் ஏற்கனவே பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு இங்கு சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றாலம் பேரூராட்சியில் உள்ள இந்த சாரல் விழா நடைபெறும் கலைவாணர் அரங்கம் புதிப்பிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சுற்றுலாத்துறையின் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சுற்றுலா பகுதிகளிலும் மேம்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து நையாண்டி மேளம், கரகாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் மற்றும் தப்பாட்டம் பரதநாட்டியம், கிராமிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இந்த விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. வசந்திமுருகேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஐ.எஸ்.இன்பத்துரை, திரு. செல்வமோகன்தாஸ்பாண்டியன், திரு. முகம்மதுஅபுபக்கர், தென்னக ரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு. பாப்புலர் வி.முத்தையா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பூ.முத்துராமலிங்கம், ஊரக வளர்ச்சி முகாமை திட்ட இயக்குநர் திரு. பழனி, தாய்கோ வங்கியின் மாநில துணைத்தலைவர் திரு. குற்றாலம் என்.சேகர், மாநில கூட்டுறவு விற்பனை இணைய தலைவர் திரு. கண்ணன் என்ற ராஜு, திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை பொறியியல் கூட்டுறவு சங்க தலைவர் திரு. மகசூப்ஜான், நெசவாளர் மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு. ஆறுமுகம், திருநெல்வேலி நகர கூட்டுறவு வங்கி தலைவர் திரு. சுதாபரமசிவம், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திரு. கல்லூர் வேலாயுதம், தூத்துக்குடி மாவட்ட கழக செயலாளர் திரு. செல்லப்பாண்டியன், உதவி இயக்குநர் பேரூராட்சிகள் திரு.மாஹனின்அபுபக்கர், செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ஜெவீரப்பாண்டியன், சுற்றுலா அலுவலர் திரு. நெல்சன், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கணேசன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு : செய்தி, மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி